தினமணி

# தண்ணீருக்கு தவிக்கும் தாமல் ஏரி விவசாயிகள்

ஆர். ஜெயபிரகாஷ்

First Published : 19 Jan 2011 12:00:00 AM IST



காஞ்சிபுரம் அருகே பராமரிப்பில்லாமல் இருக்கும் தாமல் ஏரி.

காஞ்சிபுரம், ஜன. 18: காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல் விளைச்சலில் முக்கிய பங்கு வகிக்கும் தாமல் கிராமத்தின் பெரிய ஏரி பராமரிப்பில்லாமல் கிடக்கிறது. முன்னாள் முதல்வர் அண்ணாதுரை காலத்துக்கு பிறகு இந்த ஏரி தூர்வாரப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் இருந்து வேலூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது தாமல் கிராமம். இக்கிராமம் நெல் விளைச்சலுக்கு பெயர் பெற்ற கிராமம். காஞ்சிபுரம் பகுதிகளிலேயே பிரதானமாக நெற்பயிர் விளையும் கிராமங்களில் இக்கிராமமும் ஒன்று.

இக்கிராமத்தில் 600 ஏக்கர் பரப்பளவில் பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியை நம்பி 3000 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இந்த விவசாய நிலங்களில்தான் பெரும்பாலான மக்கள் நெற்பயிர் செய்கின்றனர்.

பல நேரங்களில் இருபோகம் பயிர் செய்யும் விவசாயிகள் சில ஆண்டுகளில் மூன்று போகம் கூட பயிர் செய்தனர். ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக ஏரியில் குறைந்த அளவே தண்ணீர் தேங்குவதால் ஒருபோகம் மட்டுமே மக்கள் பயிர் செய்கின்றனர்.

இந்த ஏரி 5 ஆண்டுகளுக்கு முன்னர் நிரம்பியது. சமீபத்தில் பெய்த மழையில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள ஏரிகள் நிரம்பின. ஆனால் இந்த ஏரியில் ஓரிரு மாதங்களுக்கு தேவையான தண்ணீர் மட்டுமே வந்தது. இந்த ஏரியில் மொத்தம் 11 மதகுகள் உள்ளன. இவற்றில் மூன்று மதகுகள் வழியாக மட்டுமே தண்ணீர் செல்கின்றன. மற்ற மதகுகள் வழியாக செல்வதற்கு தேவையான தண்ணீர் ஏரிக்கு வரவில்லை. இதனால் இந்த ஆண்டும் விவசாயிகள் ஒரு போகம் மட்டுமே பயிர் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதுகுறித்து இக்கிராம மக்களிடம் கேட்டபோது, ""இந்த ஏரியை நம்பித்தான் எங்கள் வாழ்வே உள்ளது. இந்த ஏரியை தூர்வாரி மழைநீர் முழுமையாக ஏரியில் தங்கவும், வரத்துக்கால்வாய் மூலம் ஏரிக்கு நீர் முறையாக வரவும் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

இப்பிரச்னை குறித்து இக்கிராம ஊராட்சி மன்றத் தலைவர் எத்திராஜிடம் கேட்டபோது, ""இந்த ஏரி எனக்கு தெரிந்து கடைசியாக அண்ணாதுரை முதல்வராக இருந்தபோது தூர் வாரப்பட்டது. ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆகிறது. அதன் பிறகு ஏரி தூர் வாரப்படவில்லை. இதனால் ஓரளவே மழைநீர் ஏரியில் தேங்குகிறது. பாலாற்றில் இருந்து (ஓச்சேரி பகுதி) இந்த ஏரிக்கு 100 மீட்டர் அகலம் மற்றும் 11 கிலோ மீட்டர் நீளத்துக்கு கால்வாய் உள்ளது. இந்த கால்வாய் வழியாக முன்பெல்லாம் ஏரிக்கு தண்ணீர் வரும்.

ஆனால் பாலாற்றிலேயே தற்போது தண்ணீர் இல்லாததால் ஏரிக்கு நீர் வரத்து போதிய அளவில் இல்லை. எங்கள் கிராமத்தில் பல்வேறு நல்ல திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக நாங்களும் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளோம். இந்த ஏரியையும் தூர்வாரினால் மகிழ்ச்சியாக இருக்கும்" என்றார் அவர்.

**தோட்டக்கலைப் பண்ணைகளில் கொய்யாக் கன்றுகள் விற்பனை**

First Published : 18 Jan 2011 12:34:30 PM IST

தஞ்சாவூர், ஜன. 17: தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை மற்றும் மருங்குளம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் கொய்யாக் கன்றுகள் தலா ரூ. 12 விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எம். செல்வராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டில் சுமார் 8,500 ஹெக்டேரில் கொய்யா பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 160 ஹெக்டேரில் இது சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அங்காபாத், லக்னோ-49, லக்னோ-46 ரக கொய்யா நல்ல மகசூல் தரவல்லது. இதை ஐந்துக்கு, ஆறு மீட்டர் இடைவெளியில் நட வேண்டும்.

45-க்கு 45 என்ற அளவில் குழிவெட்டி அதில் தொழுஉரம் 10 கிலோ, வேப்பம் புண்ணாக்கு ஒரு கிலோ, மேல் மண் இட்டு, குழியில் லிண்டேன் 1.3 சதத் தூள் விட்டு நடவு செய்ய வேண்டும். நட்ட அன்றும், பின்னர் மூன்று நாள்கள் கழித்தும் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம். பின்னர், 10 நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்சினால் போதும்.

நடவு செய்யப்பட்ட கொய்யாப் பயிர்கள் இரண்டரை ஆண்டுகள் முதல் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்.

நன்கு பராமரிக்கப்பட்ட தோட்டத்தில் இருந்து ஒரு ஹெக்டேர் பரப்பளவில் சுமார் 20 டன்கள் வரை மகசூல் பெறலாம்.

கொய்யாப் பழத்தில் வைட்டமின் சி சத்து அதிகளவில் உள்ளது. எனவே, இதற்கு சந்தை வாய்ப்பு அதிகம் இருப்பதால், விவசாயிகள் இதை சாகுபடி செய்து பயன்பெறலாம்.

**பயறு சாகுபடி: விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 18 Jan 2011 11:56:07 AM IST

ராமநாதபுரம், ஜன. 17: மண்டபம் அருகேயுள்ள மூப்பன்வலசையில் பயறு சாகுபடி பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விதை கிராமத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த முகாமிற்கு, வேளாண்மை துணை இயக்குநர் ராஜேந்திரன் தலைமை வகித்து துவக்கிவைத்து பேசினார். உதவி இயக்குநர் பாஸ்கரமணியன் முன்னிலை வகித்தார்.

விதைச் சான்று உதவி இயக்குநர் ராஜகோபால், கடலோர உவர் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் வீரமணி ஆகியோர் கலந்து கொண்டு, பயறு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

மண் வளத்தை அதிகரிப்பது, குறைந்த நீர்த்தேவை, தனிப் பயிர், ஊடு பயிர், கலப்பு பயிர், வரப்பு பயிர் போன்ற காரணங்களால் பயறு சாகுபடி சிறந்தது என்று விளக்கமளித்தனர்.

உரமிடுதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, அறுவடை உத்திகள், விதை சேமிப்பு முறைகள் ஆகியன குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு, சிறிய நீர் தெளிப்பான் குறித்த செயல் விளக்கங்களும் செய்து காட்டப்பட்டது.

வேளாண்மை அலுவலர் பாலமுருகன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் ஜமால் முகம்மது, மனுவேல் பிச்சை ஆகியோர் செய்திருந்தனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ. 3000 வழங்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 18 Jan 2011 12:22:46 PM IST

அரியலூர், ஜன. 17: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3000 கொள்முதல் விலை வழங்க வேண்டும் என தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டம் அரியலூர் மாவட்டம், திருமானூரில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, சங்கத்தின் மாவட்டச் செயலர் மணி தலைமை வகித்தார். சங்கப் பொறுப்பாளர்கள் கணேசன், சண்முகம், வைத்தியலிங்கம், நல்லதம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் மாநிலத் துணைச் செயலர் அன்பழகன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

2009-10 ஆம் ஆண்டில் கரும்பு வெட்டிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு அரை கிலோ சர்க்கரை வழங்க வேண்டும். 2010-11 ஆம் ஆண்டுக்கான கரும்பு விலையை நிர்ணயம் செய்வதற்காக முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி, டன் ஒன்றுக்கு ரூ. 3000 விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

2010-11 ஆம் ஆண்டு விதை கரணை வெட்டிய விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள தொகையை ஆலை நிர்வாகம் உடனடியாக வழங்க வேண்டும்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை அரசு உடனடியாக செப்பனிட வேண்டும். திருமானூர் முதல் தூத்தூர் வரை உள்ள சாலையை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும். திருமானூர் - கீழப்பழூர் சாலையில் முடிகொண்டான் அருகேயுள்ள 1, 4 மதகுகளை மேம்பாலமாக மாற்றி அரசு கட்டித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் சங்கப் பொறுப்பாளர்கள் உமாபதி, சேகர், ராமசாமி, கணேசன் ராமசாமி, பாப்பா, ஞானமணி, சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை, வேளாண் இடுபொருள்கள் அளிப்பு**

First Published : 18 Jan 2011 12:20:38 PM IST

அரியலூர், ஜன. 17: அரியலூர் வட்டார வேளாண் துறை சார்பில், ஒட்டக்கோவில் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அடையாள அட்டை, வேளாண் இடுபொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராமலிங்கம் விழாவுக்கு தலைமை வகித்து, விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளையும், வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்,

சிங்க் சல்பேட் உரம், பண்ணைக் கழிவுகளை மக்க வைப்பதற்கு புளுரோட்டஸ் பூஞ்சானம், எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் ஜிப்சம், உயிர் உரம், நுண்ணூட்டச் சத்து உரம் ஆகியவற்றை வழங்கினார்.

விழாவுக்கு ஊராட்சித் தலைவர் ஜோதி மணிவேல் முன்னிலை வகித்தார்.

முன்னதாக, துணை வேளாண் அலுவலர் காசிநாதன் வரவேற்றார். உதவி வேளாண் அலுவலர் கந்தசாமி நன்றி கூறினார்.

விழாவுக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் பிரியா, ஸ்ரீதேவி ஆகியோர் செய்திருந்தனர்.

**விலை உயர்வால் கரும்பு விற்பனை குறைந்தது**

First Published : 18 Jan 2011 11:25:50 AM IST

எடப்பாடி, ஜன.17: விலை உயர்வால் கரும்பு விற்பனை குறைந்தது. இதனால் கரும்பு வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொங்கல் பண்டிகையின் போது கரும்பு படையல் இடுவது வழங்கம். இதற்காக ரஸ்தாளி வகை கரும்பு அதிகளவில் பயிரிடப்படும். இவ்வகை கரும்புகள், கூடக்கல், பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, நெடுங்குளம் உள்ளிட்டப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் பயிரிடப்பட்டது.

கரும்பு விவசாயத்துக்கு பராமரிப்பு செலவுகள் உயர்ந்ததால் கரும்பின் விலையும் உயர்ந்தது. ஏற்கனவே விலை உயர்ந்துள்ள அரிசி, சர்க்கரை, வெல்லம், எண்ணெய் உள்ளிட்டப் பொருள்களை வாங்கும் மக்கள், கரும்பையும் அதிக விலை கொடுத்து வாங்குவர் எனக் கருதிய வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து கூடுதல் விலைக்கு கரும்பை கொள்முதல் செய்தனர்.

கடந்த ஆண்டு 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டின் விலை ரூ.100 முதல் ரூ.150 வரை விற்பனையானது. இந்த ஆண்டு ரூ.200 முதல் ரூ.280 வரை விலை உயர்ந்தது. இதனால் ஒரு கரும்பு ரூ.20 முதல் ரூ.30 வரை விற்கப்பட்டது. இதனால் விற்பனை குறைந்தது.

இதுகுறித்து எடப்பாடியை சேர்ந்த கரும்பு வியாபாரி முருகேசன் கூறியது: அனைத்துப் பொருள்களும் விலை உயர்ந்துள்ளதால், கரும்பும் அதிக விலைக்கு கொள்முதல் செய்தோம். ஆனால், பொதுமக்கள் கடந்த ஆண்டு விலைக்கே கேட்கின்றனர். நஷ்டம் ஏற்படும் என்பதால் விற்கவில்லை. மேலும், அதிகமான கரும்பு வாங்குவோர் கூட எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டனர். இதனால் விற்பனை பாதியாக குறைந்துவிட்டது. விற்பனையாகாத கரும்புகள் ஓரிரு நாளில் காய்ந்து விடும் நிலையில் உள்ளது என்றார்.

**கூட்டுறவு வேளாண் வங்கியுடன் ஸ்ரீராம் லைப் இன்சூரன்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

First Published : 18 Jan 2011 12:07:14 PM IST

மதுரை, ஜன. 17: ஸ்ரீராம் லைப் இன்சூரன்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில், ஸ்ரீராம் லைப் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குநர் அகிலா ஸ்ரீனிவாசன் மற்றும் கூட்டுறவு வங்கி சிறப்பு அதிகாரி எம்.தர்மலிங்கம் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தொடக்கநிலை வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு நிதியுதவி அளிப்பதே, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை வங்கியின் முக்கிய நோக்கம்.

இந்த வங்கி மாநிலம் முழுவதும் விவசாயிகள், கிராமப்புறத் தொழில்புரிபவர்களுக்கு கடன் வசதி அளித்து வருகிறது.

1974-ல் தொடங்கப்பட்ட ஸ்ரீராம் குழுமம், இந்திய நிதிச் சேவைத் துறையில் மிகப் பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது.

சிட்பண்ட் மற்றும் கனரக வாகனக் கடன் வழங்குதல் தொழிலில் முன்னணியில் உள்ள இந்த நிறுவனம் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏஜெண்டுகளுடன் 30 லட்சத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், கூட்டுறவு வங்கியின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஆயுள் காப்பீடு அளிப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக அகிலா ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் உள்ள அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் பொருளாதார ஏற்றத்தை ஏற்படுத்த, இந்த ஒப்பந்தம் உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஸ்ரீராம் நிறுவனத்தின் திட்டங்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் ஒட்டுமொத்த கார்ப்பொரேட் ஏஜெண்ட் என்ற அந்தஸ்து கூட்டுறவு வங்கிக்குக் கிடைத்துள்ளது.

இந்த முயற்சியின் விளைவாக வங்கிக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று நம்புவதாக வங்கியின் சிறப்பு அதிகாரி எம்.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

**புவி வெப்பமாதல் விழிப்புணர்வு கருத்தரங்கு**

First Published : 18 Jan 2011 12:24:24 PM IST

புதுக்கோட்டை, ஜன. 17: புதுக்கோட்டை மாவட்டம், ராயவரம் சுப்பிரமணியன் பாலிடெக்னிக் கல்லூரியில் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் புவி வெப்பமாதல் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

இதில், மாவட்ட பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் அரங்கன் பங்கேற்று, புவி வெப்பமயமாதல், அதற்கான காரணிகள், அதனால் உயிரினங்களுக்கு ஏற்படும் ஆபத்து, பருவ நிலை மாற்றம், இதைத் தடுக்க மரங்களை அதிகளவில் வளர்ப்பது குறித்து மாணவர்களிடம் வலியுறுத்தினார். கல்லூரி துணை முதல்வர் (பொ) வீ. மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் நூறு மரக் கன்றுகளை வளாகத்தில் மாணவர்கள் நடவு செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர் தி. மகேந்திரன் வரவேற்றார். செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார். ஏற்பாடுகளை, நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பாலமுருகன், ரோட்டரி சங்க ஒருங்கிணைப்பாளர் அமிர்தராஜ், உதவியாளர்கள் ஆனந்த், சரவணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

தினமலர்

**விதை மூலம் சின்ன வெங்காயம் நாற்றங்கால் மேலாண்மை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:00 IST



சின்ன வெங்காயம் பொதுவாக இரண்டு பட்டங்களாகப் பிரித்து சாகுபடி செய்யப்படுகின்றது. ஒன்று: சித்திரை - வைகாசி பட்டம், இரண்டு: ஐப்பசி-கார்த்திகைப்பட்டம். நாற்று வெங்காயம் (விதை மூலம்) மேற்கூறிய இரண்டு பட்டங்கள் தவிர்த்து இடைப்பட்ட மார்கழி முதல் சித்திரை மாதம் வரை உள்ள காலங்களில் மிகச் சிறப்பாகவும், வெயிலைத் தாங்கி விளையும் சக்தி கொண்டவையாகவும், கூடுதல் மகசூல் தரக்கூடியனவாகவும் சிறப்பான விற்பனைத் தரம் கொண்டவையாகவும், அளவில் பெரியதாகவும் இந்த நாற்று வெங்காய ரகங்கள் உள்ளன. இவைகள் விதைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

<u>நாற்று வெங்காய ரகங்கள்:</u> கடலூர் மாவட்டம் - நானமேடு என்ற கடற்கரைக் கிராமத்தைத் தாயகமாகக் கொண்ட கடலூர் ரகம். இது "மொட்லூர்' எனவும் அழைக்கப்படுகின்றது. கோவை பல்கலைக்கழக வெளியீடான சிறப்பு பொறுக்கு ரகம் - கோ.ஓ.எண்.5 (கோயம்புத்தூர் ஆனியன் - எண்:5) இதுவே இன்று விவசாயிகளிடம் அதிக அளவு சாகுபடியில் - நடைமுறையில் உள்ளது. கோ.ஓ.எண்.5 என்று அழைக்கப்படுகிறது. இது தவிர தனியார் கம்பெனிகளின் சில ரகங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.கோ.ஓ.எண்:5: கோவை பல்கலைக்கழகத்தின் சிறப்புத் தேர்வு ரகமான கோ.ஓ.எண்:5 பற்றி விரிவாகப் பார்ப்போம். * விதை மூலம் உற்பத்தி, * அறுவடைக் காலம் 90 முதல் 100 நாட்கள். * உருண்டை வடிவம் கொண்ட மார்க்கெட் ரகம். * இளம் சிவப்பு காய்கள் - தரைக்குப் பக்கவாட்டில் விளையும் கிழங்குகள். * ஏக்கருக்கு 8000 முதல் 12,000 கிலோ கூடுதல் மகசூல் * அறுவடைக்குப் பின் சேமித்து வைக்க உகந்த ரகம். * கடலூர் ரகம் போலவே அறுவடை சமயத்தில் மழை பெய்தால் முளைக்கும் தன்மை உண்டு.

<u>விதைக்கும் பட்டம்:</u> சிறிய வெங்காய விதைகள் மூலம் சாகுபடி செய்வதற்கு சரியான பட்டம் - மழை அளவு குறையும் கார்த்திகை பின்பகுதியில் ஆரம்பித்து சித்திரை 15 வரை தொடர்ந்து நாற்று பாவி நடவு செய்யலாம். வைகாசி முதல் வாரத்திலிருந்து கார்த்திகை 15 வரை அல்லது 20 வரை நாற்று விடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். ஒரு கிலோ விதையை 17 பாத்திகளில் (20' து 3 1/2') சீராகத் தூவிவிட வேண்டும். இத்துடன் 500 கிராம் பியூரடான் 3ஜி குருணை மருந்தை மணல் கலந்து சீராக வரப்பு வாய்க்காலிலும் சேர்த்து தூவிவிட வேண்டும். இவை எறும்புகள் மற்றும் வண்டுகள் நடமாட்டத்தைக் குறைக்கும். பின் அவியல் நெல்லை வீடுகளின் முற்றத்தில் பரப்பும் பொழுது கையாள்வதைப் போல் சீராகக் கிளறிவிட வேண்டும். இதனால் 40% முதல் 60% சதவீத விதைகள் மண்ணுடன் மேலாகக் கலந்துவிடும்.

மீதமுள்ள 40% விதைகள் எந்த ஆதரவும் இன்றி கருப்பாக மேலே கிடக்கும். இந்த விதைகளைக் கண்டிப்பாக மண்ணிற்குள் மறைத்தே ஆக வேண்டும். இதை மறைப்பதற்கு ஆற்றுப்படுகையில்

கிடைக்கும் இளம் திருநீர் போன்ற வண்டல் மண்ணை சீராகத் தூவிவிட வேண்டும். கரிசல் மற்றும் இருமண்பாடு கொண்ட நிலங்களில் நாற்று பாவுபவர்கள் கண்டிப்பாக இந்த விதிமுறையை அவசியம் கடைபிடிக்க வேண்டும்.இளம் மணல்பாங்கு, அல்லது செம்மண் நிலங்களில் நாற்று விடுபவர்கள் மேல்மண்ணை அரை அடி ஆழத்திற்கு ஒதுக்கிவிட்டு அடுத்து உள்ள மண்ணை பயன்படுத்திக் கொள்வது சிறப்பு. மண்கொண்டு மூடும்பொழுது 1 பாத்திக்கு 4 அல்லது 5 கூடை (அல்லது) காரச்சட்டி இளம் மணலே போதுமானது. அதிகமான மண்ணை பயன்படுத்தக் கூடாது. பயன்படுத்தினால் விரைந்த முளைப்புத் தன்மைக்கு இடையூறாக அமையும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீர் மேலாண்மை: நாற்று பாவிய பின் அதிவேக நீர்ப்பாசனத்தை அவசியம் தவிர்க்கவும். பொதுவாகத் தண்ணீரைக் குறைத்து அளவுடன் நீர் பாய்ச்சவும்.

**விதை பாவிய முதல் மூன்று நாளைக்கு:** மூன்று தண்ணீரும் (1, 2, 3வது நாள்), நான்காம் நாள் தவிர்த்து 5வது நாள் 4ம் தண்ணீரும், ஆறாவது, ஏழாவது நாள் தவிர்த்து எட்டாவது நாளில் 5ம் தண்ணீரும் பாய்ச்ச, எவ்வித மாற்றமுமின்றி சிறப்பான முளைப்புத் திறனைக் காண்பிக்கும். இது பொதுவான சிபாரிசு. மழை கூடிய காலங்களிலும் கரிசல் பகுதியில் நாற்று விடும்பொழுதும் மண்ணின் ஈரம் மற்றும் பருவ நிலைக்குத் தகுந்தாற்போல் நீர் பாய்ச்சிக் கொள்ளுங்கள்.

கடுமையான வெயில் நேரங்களில் நாற்றங்காலுக்கு நீர் பாய்ச்சுவதைக் கண்டிப்பாக தவிர்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நாற்று நன்கு முளைத்தபின் (நாற்றின் வயது 12 நாட்களுக்கு மேல் சென்ற பின்) நிலத்தை நன்கு உலரவிட்டு 3 அல்லது 4 நாள் இடைவெளியில் நீர் பாய்ச்சுவது மிகச்சிறப்பு. 25 நாட்களுக்கு மேற்பட்ட நாற்றுக்கு 5 தினத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சுவதே மிகவும் நன்று.

அடிக்கடி நீர் பாய்ச்சினால் வேர்ப்பகுதி சரியான கிழங்கு வடிவம் கொள்ளாமல் நாற்று திமுதிமுவென வளர்ந்து விரைப்பு இல்லாமல் மேலும் கீழும் சாய்ந்துவிடும். சுருங்கச் சொன்னால் காய்ச்சலும் பாய்ச்சலும் எனலாம்.கண்மணிசந்திரசேகரன், பி.எஸ்சி., கண்மணி இயற்கை அங்காடி மற்றும் இயற்கை வேளாண்மை இடுபொருளகம், 404, பாங்க் ஆப் இந்தியா கீழ்தளம், ரயில்வே நிலையம் எதிர்புறம், பழநிப்பாதை, ஒட்டன்சத்திரம்-624 619.
98659 63456, 99522 96195.

**சவுக்கு சாகுபடிக்கு தண்ணீரில் வளர்க்கப்பட்ட நாற்றுக்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:00 IST



தற்போது வடகிழக்கு பருவமழை ஓரளவிற்கு குறைந்து வருகின்றது. இது மார்கழி பட்டமாகும். மார்கழி-தைப் பட்டத்தில் விவசாயிகள் அதிகப் பரப்பளவில் சவுக்கு நாற்றினை நடுவார்கள். விவசாயிகள் மரங்களில் இருந்து விதைகளை சேரித்து சவுக்கு நாற்றுக்களை உற்பத்தி செய்து விவசாயம் செய்துவந்தனர். விதைகள் மூலம் உருவாக்கப்பட்ட மரங்கள் சிறியது பெரியதாக ஒரு சீர் இல்லாமல் இருக்கும். மேலும் இம்மரங்கள் வறட்சியில் வாடி இறந்துவிடும். மேலும் மழைக்காலங்களில் புயல் காரணத்தினால் அடியோடு சாய்ந்துவிடும். இதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சவுக்கு நாற்றுக்களை புதிய முறையில் உற்பத்தி செய்து தனக்கும், தமிழகத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளார் வெங்கடபதி ரெட்டியார் (நம்.6, பெருமாள் கோயில் தெரு, கூடப்பாக்கம், புதுச்சேரி-605 502). ஜனாதிபதி பரிசிலிருந்து பல்வேறு விருதுகளைப் பெற்று அடக்க ஒடுக்கமாக விவசாயிகளின் வாழ்வில் வளம்பெருக அமைதியாக பல்வேறு ஆராய்ச்சிகளை செய்துவருகிறார்.

இவர் சீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மண் கலவை இல்லாமல் தண்ணீரில் நாற்றுக்களை உற்பத்தி செய்து வெற்றி கண்டுள்ளார். இந்த முறையை ஆங்கிலத்தில் "வாட்டர் கல்சர் மெதட்' என்பர். இவர் இந்த முறையை இணையதளம் மூலம் அறிந்துகொண்டு ஒரு உந்துதலைப் பெற்றார். இவர் பார்த்தது யாதெனில் சீனாவில் அரசு பண்ணையில் வாட்டர் கல்சர் முறையில் சவுக்கு நாற்றுக்களை குறைந்த செலவில் உற்பத்தி செய்துகடலோரப் பகுதிகளில் அதிகப் பரப்பளவில் நட்டு வெற்றி பெற்ற காட்சியாகும்.

இந்த தொழில்நுட்பத்தை முழுமையாக கற்று உடனே சோதித்துப் பார்த்து புதுச்சேரியில் அறிமுகப்படுத்தினார். இவர் என்ன செய்தார் என்பதைக் கவனிப்போம். சவுக்கு மரங்களில் 8-10 அங்குலம் அளவில் குச்சிகளை சேகரித்து சிறிய கட்டுகளாக கட்டினார். இந்த கட்டுகளை வேர்

ஊக்கி "ஐ.பி.ஏ' கலவையில் 24 மணி நேரம் ஊறவைத்தார். பிறகு 8-10 செ.மீ. பிளாஸ்டிக் டம்ளரில் 4 செ.மீ. சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஊற்றி அதில் "ஐ.பி.ஏ.' கலவையில் ஊறவைத்த கட்டுகளை மாற்றினார். அன்றாடம் தண்ணீரை மாற்றிக் கொண்டே இருந்தார். இந்த முறையை அனுசரித்து 8 முதல் 15 தினங்களில் குச்சிகளில் நன்கு வேர்கள் வளர்ந்தன.

பிறகு மண் கலவை அல்லது மண் இல்லாத கலவையில் செடிகளை வளர்த்து இவைகள் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டன. இந்த முறையில் குறைந்த இடத்தில் அதிக நாற்றுக்கள் உற்பத்தி செய்ய முடியும். வேலை ஆட்கள் குறைவு. இந்த முறையில் கவனிக்க வேண்டியது யாதெனில் சுத்தமான தண்ணீரினை உபயோகிக்க வேண்டும். குழாய் தண்ணீரை பயன்படுத்தக்கூடாது. அதில் குளோரின் கலந்துள்ளது. நன்கு "ஆட்டோகிளோவில்' வடிகட்டப்பட்ட தண்ணீரை உபயோகிக்கலாம். இவர் மேலும் ஆராய்ச்சியில் அக்கறை காட்டி கன்றுகள் சிறியதாகவும், பெரியதாகவும் அதாவது ஒரே சீராக இல்லாத தன்மையை அகற்ற ஆஸ்திரேலியா முறையை அனுசரித்தார். இந்த முறையில் குச்சிகளில் உள்ள இலைகளை வெட்டி எடுத்து வேர் உருவாக்கி நாற்றுக்கள் உற்பத்தி செய்கிறார். இது வீரிய ரகம் என்கிறார். இந்த முறையில் சவுக்கு நாற்றுக்களை உருவாக்க பசுமைக் குடில்களை அமைத்து அதில் தாய்ச் செடிகளை வளர்த்து வருகிறார். ஆக விவசாயி தற்போது இரண்டு ரகங்களில் (சீனா, ஆஸ்திரேலியா) ஆராய்ச்சி செய்து வருகிறார். இவரை கட்டுரை ஆசிரியர் "ஐயா! தற்போது நடப்பது சவுக்கு நாற்று நடும் காலம். தங்கள் ஆராய்ச்சியை படித்த விவசாயிகள் நாற்றுக்கள் கிடைக்குமா என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்' என்று கேட்டபோது கீழ்க்கண்ட விவரம் கிடைத்தது.

நான் தற்சமயம் ஆஸ்திரேலியா மற்றும் சீனா இரண்டு ரகங்களில் கன்றுகள் உற்பத்தி செய்ய இருக்கின்றேன். விவசாயிகளுக்கு விலை குறைவாக தரமான சவுக்கு நாற்றுக்களை எந்தமுறையில் கொடுக்க முடியுமோ அந்த முறையை தொடருவேன் என்றார். சவுக்கு சாகுபடியில் வெகு சீக்கிரத்தில் விதை போட்டு, நாற்றுக்களை உண்டாக்கி அவைகளை நட்டுக்கொண்டிருந்த பழைய முறை மாறி தண்ணீரில் வளர்க்கப்பட்ட நாற்றுக்களை நடும் புதிய முறை பிரபல்யமாகப் போவது நிச்சயம். "பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்க்கொப்ப ரெட்டியார் போன்ற விவசாய பிரம்மாக்கள் விவசாயத்திற்கு மாபெரும் சேவைகள் செய்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:00 IST

***தோட்டக்கலைப் பயிர்களில் மெல்லுடலிகள் மேலாண்மை:*** பயிர்களுக்கு தீமை செய்யும் பூச்சிகள் வகையில் பூச்சியினமல்லாத, ஆனால் பயிர்களுக்கு குறிப்பாக தோட்டக்கலைப் பயிர்களுக்கு கேடு விளைவிக்கக்கூடிய ஒரு வகை இனம் உண்டு. அவை மெல்லுடலிகள் பிரிவில் "காஸ்ட்ரபோடா' வகுப்பைச் சார்ந்த நத்தையும், கூண்டில்லாத நத்தையும் ஆகும். இவற்றுள் பால் வேறுபாடுகள் கிடையாது. இவைகள் தட்டையான நீண்ட கால்கள் மூலம் இடம்பெயர்கின்றன. பெரும்பாலும் சாம்பல் நிறத்தில் காணப்படும். இவற்றின் கூடு வெள்ளை மரப்பட்டை நிறம் முதல் கருப்பு நிறம் வரை உண்டு.
நத்தைகள் ஈரப்பாங்கான நிலப்பரப்பில் 3 செ.மீ. ஆழத்திற்கு 124 செ.மீ. என்ற அளவில் துளையிட்டு அதனுள் ஒரே சமயத்தில் 60 முட்டைகள் வரை இடும். 2 வாரங்களில் முட்டைகள் பொரிந்து அவற்றிலிருந்து இளம் நத்தைகள் வெளிவரும். இவை பயிர்களின் தளிர்பாகங்களை உண்டு வளரத் துவங்கும். 2 ஆண்டுகளில் முழு வளர்ச்சியை அடைகின்றன. நத்தைகள் குளிர்காலங்களில் கூட்டமாகக் காணப்படும். பாறை இடுக்குகள், புதர்கள், குப்பைக் குவியல்கள் ஆகிய பகுதிகளில் இவற்றின் செயல்பாடுகள் அதிகமாகும். பகற்பொழுது தவிர்த்து இரவு நேரங்களில் மறைவிடத்தை விட்டு வெளியேறி பயிர்களுக்கு நாசம் விளைவிக்கின்றன. பப்பாளி, பாக்கு, ஏலம், மிளகு முதலானவற்றில் மெதுவாக ஊர்ந்து ஏறிச்சென்று இலைகளின் அடிப்பாகத்தில் பாதுகாப்பான பகுதிகளில் ஒட்டிக்கொண்டு ஊறு விளைவிக்கத் துவங்கும்.

**இலக்காகும் பயிர்கள்:** பாக்கு, மிளகு, ஏலம், வாழை, பப்பாளி, லெட்டூஸ், முட்டைக்கோஸ், கடலை, சோயா பீன்ஸ், மக்காச்சோளம் மற்றும் இதர தோட்டக்கலைப்பயிர்கள். இறுகிய மண் கண்டங்களில் வளர்க்கப்படும் பயிர்கள் நத்தையின் தாக்குதலுக்கு எளிதில் இலக்காகின்றன. அத்தகைய பகுதிகள் நத்தைகளின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் உகந்ததாகும். நத்தைகள் பழம், பூ, மொக்குகள், மல்பெரித் தழைகள், பருத்திச் செடிகள் ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றன.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு:**

* மண்ணின் வகைகளுக்கேற்றவாறு இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். வழுவழுப்பான விதை பாத்திகள்
நத்தையின் நடமாட்டத்தை வெகுவாகக் குறைக்கின்றன.
* குறைந்த வெப்பநிலையில் பயிர் செய்தால் நத்தைகள் அல்லது அதன் முட்டைகளை உறைய செய்துவிடுகின்றன.

* நத்தைகளின் தாக்குதலுக்கு எளிதில் உட்படும் தாவரங்களை 3-5 மீட்டர் இடைவெளி தள்ளி பயிர் செய்வதன் மூலம் நத்தைகளின் இடப்பெயர்ச்சியைத் தவிர்க்கலாம்.
* அளவான பரிந்துரைக்கப்பட்ட உர அளவே பின்பற்றப்பட வேண்டும். வீரியமிக்க நாற்றுகளை உபயோகிக்க வேண்டும். விதைக்கும் நாளை மாற்றி அமைப்பதன் மூலம் நத்தைகளின் தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்கலாம். உதாரணமாக நத்தைகளின் செயல்பாடுகள் குறைந்திருக்கும் வறண்ட நாட்களைத் தேர்ந்தெடுக்கலாம்.
* நத்தைகளை நம் கைகளால் பொறுக்கி அழிக்கலாம்.உயிரியல் முறை: நத்தைகளை அழித்து உண்ணும் ஒரு வகை நண்டுகள் உள்ளன. பூரான் வகையைச் சார்ந்த ஆர்தோமார்பா, பூரான் நத்தைகளைச் செயலிழக்கச் செய்து உண்கின்றன.
ரசாயன முறை: 5 சதம் மேட்டால்டிஹைடு தெளிப்பதன் மூலம் நத்தைகளைக் கட்டுப் படுத்தலாம். சாதாரண உப்பை பயிர்களின் வரிசைக்கிடையில் (200 கிலோ/எக்டர் - 2 முறை) இடுவதன் மூலம் நத்தைகளின் செயல்பாட்டைக் குறைக்கலாம். (தகவல்: சி.செந்தில்குமரன், கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**பொங்கல் பண்டிகை முடிந்தும் குறையாத காய்கறிகள் விலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:11 IST

கோயம்பேடு : பொங்கல் பண்டிகை முடிந்தும், காய்கறிகள் விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ள நிலையில், மீண்டும் தக்காளி விலை அதிகரித்து வருவது, பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.கர்நாடகா, ஆந்திர மாநிலத்தில் இருந்து வரத்து குறைவு காரணமாக, கடந்த அக்டோபர் முதல் சென்னையில் காய்கறி விலை கணிசமாக அதிகரிக்க துவங்கியது. வெளிநாடுகளுக்கு வெங்காயம் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதால், நவம்பர் முதல் அவற்றிற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது.அப்போது, அதிகபட்சமாக ஒரு கிலோ வெங்காயம் 120 ரூபாய் வரை விற்கப்பட்டது. மத்திய அரசின் முயற்சியால், பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், இந்தியாவிற்கு வெங்காயம் அனுப்ப பாகிஸ்தான் அரசு திடீர் தடை போட்டது.இதனால், வெங்காயம் விலை மீண்டும் உயர துவங்கியுள்ளது. சீனாவில் இருந்து, தற்போது வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது. வடமாநிலங்களில் விற்பனைக்கு வந்துள்ள சீன வெங்காயம் அடுத்த ஒரு வார காலத்திற்குள், சென்னை கோயம்பேடு மொத்த விற்பனை மார்க்கெட்டிற்கு இறக்குமதியாகும் என தெரிகிறது.இது ஒருபுறமிருக்க, பொங்கல் பண்டிகைக்கு பிறகு காய்கறிகளின் விலை குறைவதற்கு வாய்ப்புள்ளதாக, கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் தெரிவித்திருந்தனர். இதனால், விலை குறையும் என்ற ஆவல், பொதுமக்களிடம் அதிகரித்தது.வரத்து குறைவின் காரணமாக,

காய்கறிகளின் விலை தொடர்ந்து உச்சத்திலேயே உள்ளது. கேரட், பீட்ரூட் உள்ளிட்ட சில வகை காய்கறிகள் மட்டுமே விலை குறைந்துள்ளது. பெரும்பாலான காய்கறிகள் தொடர்ந்து இரட்டை இலக்க விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது.கடந்த சில நாட்களாக கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் இருந்து வரத்து குறைந்ததன் எதிரொலியாக, தக்காளி விலை மீண்டும் சென்னையில் அதிகரிக்க துவங்கியுள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ முதல் தர தக்காளி 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது.அதற்கடுத்த ரக தக்காளி குறைந்தபட்சம் 30 முதல் 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஒரு கிலோ முட்டைகோஸ் 10 ரூபாய்க்கும், பீன்ஸ் 18 முதல் 20, கேரட் 10 முதல் 13, பீட்ரூட் 8 முதல் 12, நூக்கல் 15, சவ்சவ் 12, முள்ளங்கி 15, உருளைக்கிழங்கு 13 முதல் 15, காலி பிளவர் 12, அவரைக்காய் 25, கத்தரிக்காய் 25, பாகற்காய் 30, புடலங்காய் 30, பச்சைப்பட்டாணி 35, டபுள் பீன்ஸ் 40, மொச்சை 35, சேனைக்கிழங்கு 20, சேப்பங்கிழங்கு 18, இஞ்சி 30, கொத்தவரங்காய் 15, பீர்க்கங்காய் 18, சுரைக்காய் 13, பூசணிக்காய் 13 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.அடுத்த ஓரிரு வாரத்தில் காய்கறிகளின் விலை குறைய வாய்ப்புள்ளது என்றாலும், கணிசமாக குறையாது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

மறந்து போன முருங்கைக்காய்: தமிழக மக்களின் உணவு வகைகளில் முக்கிய இடம் பிடிப்பது முருங்கைக் காய். கடந்த ஆண்டு இதே நாளில் கிலோ 30 ரூபாய்க்கு கூவி கூவி விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய், தற்போது 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.தமிழகத்தில் விளைச்சல் குறைந்ததால் குஜராத்மற்றும் மகாராஷ்டிரா(மும்பை) மாநிலங்களில் இருந்து எடுத்து வரப்படுவதே, விலை உயர்விற்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**நெல் உழவர் வயல்வெளி பள்ளி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,01:06 IST

திட்டக்குடி : பெண்ணாடம் அடுத்த தி.அகரத்தில் நெல் உழவர் வயல் வெளிப் பள்ளி பயிற்சி முகாம் நடந்தது. வக்கீல் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். பாசன சங்கத் தலைவர் ஆறுமுகம், விவசாய கூட்டு பொறுப்பு குழுத் தலைவர் கோவிந்தசாமி முன்னிலை வகித்தனர். முன்னோடி விவசாயி அறிவழகன் வரவேற்றார். நல்லூர் வேளாண் துணை அலுவலர் பரமசிவம் ஆலோசனை வழங்கினார். இதில் மருந்தில்லா விவசாயம் செய்யும் முறை, நெல் பயிரில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் மற்றும் நெற்பயிரில் அதிக மகசூல் பெறுவது குறித்து

பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னோடி விவசாயிகள் செல்வராஜ், ஜெயராமன், சங்கர், வீராசாமி உட்பட 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

**கரும்பு அறுவடை செய்ய கூலியாட்கள்... தட்டுப்பாடு : நவீன இயந்திரங்கள் தேவை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:43 IST

தியாகதுருகம் : விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு வெட்டும் கூலியாட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளால் கரும்பு சாகுபடி செய்யப்படுவது அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் மூங்கில்துறைப்பட்டு(கள்ளக்குறிச்சி-1), கச்சிராயபாளையம் (கள்ளக்குறிச்சி-2) மற்றும் பெரியசெவலை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், முண்டியம்பாக்கம், தியாகதுருகம் அடுத்த கலையநல்லூர், செஞ்சி அடுத்த செம்மேடு ஆகிய இடங்களில் தனியார் சர்க்கரை ஆலைகளும் இயங்கி வருகின்றன. இதனால் நெல்லுக்கு அடுத்து முக்கிய விளைபயிராக கரும்பு உள் ளது. பராமரிப்பு சிரமம் குறைவு என்பதால் நெல் பயிரிட்டு வந்த பலரும் தற்போது கரும்பு சாகுபடிக்கு மாறிவருகின்றனர். இதனால் திரும்பிய பக்கமெல்லாம் விளைநிலங்களில் கரும்பு பயிர்களை காணமுடிகிறது. பிற பயிர் சாகுபடியில் பல்வேறு நவீனயுத்திகளை கையாண்டு விவசாயிகளின் வேலைகளை எளிதாக்கினாலும், கரும்பு சாகுபடியில் இன்னும் பாரம்பரியமான முறைகளே அனைவராலும் பின்பற்றப்படுகிறது. வெளிநாடுகளில் கரும்பு சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களை தமிழகத்தில் புழக்கத்திற்கு கொண்டுவருவது என்பது இன்னும் முழுமையாக செயல்வடிவம் பெறவில்லை.

மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்து வரும் நிலையில் கூலியாட்கள் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இது கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு கடும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. விளைந்த கரும்பை தக்க தருணத்தில் அறுவடை செய்து சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பிவைப்பது என்பது தற்போதைய சூழலில் விவசாயிகளுக்கு கடும் சவாலாகவே உள்ளது. சர்க்கரை ஆலைகளில் இருந்து வெட்டு அனுமதி கிடைத்தாலும் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல் பல விவசாயிகள் அவதிப்படுவது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது குறித்த நேரத்தில் கரும்பை அறுவடை செய்து ஆலைக்கு அனுப்பவில்லை எனில் கட்டுமானம் குறைந்து நஷ்டம் ஏற்படும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். இதனால், என்ன கூலிகேட்டாலும் கூலியாட்களுக்கு கொடுத்து கரும்பை அறுவடை செய்கின்றனர்.

தற்போது கரும்பு அறுவடை தினக்கூலி அடிப்படையில் செய்யப்படுவது இல்லை. கூலியாட்கள் ஒரு குழுவாக சேர்ந்து ஒப்பந்த அடிப்படையில் அறுவடை செய்து தருகின்றனர். விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில் ஒரு டன் கரும்பு அறுவடை செய்து வாகனங்களில் ஏற்றுவதோடு 460 ரூபாய் கூலி தரப்படுகிறது. இதுவே வாகனங்கள் வயலுக்குள்வந்து கரும்பு ஏற்றமுடியாமல் தொலைவில் நிறுத்தப்பட்டால் 500 ரூபாய்வரை கூலி கேட்கின்றனர். நாளுக்கு நாள் கூலியாட்கள் கிடைப்பது அரிதாகிவிட்டதாலும், அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து வருவதாலும் கரும்பு வெட்டு கூலியும் அதிகமாக கேட்கின்றனர். இப் பிரச்னைகளால் கரும்பு அறுவடைக்கும், வாகனக்கூலி தருவதற்கே பாதிதொகையை செலவழிக்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதில் ஆண்டு முழுவதும் பராமரித்து, போதிய ஊட்டச்சத்து உரங்களை வாங்கி தெளித்து, குறித்த நேரத்தில் நீர்பாய்ச்"ம் விவசாயிக்கு மிஞ்சுவதை கணக்கு பார்த்தால் ஒரு டன்னுக்கு 500 ரூபாய் கிடைப்பதே அரிது என்ற சூழல் உள்ளது. நெல் சாகுபடியில் இதேபோன்ற பலப் பிரச்னைகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்தி தீர்வுகாணப்பட்டு அவை வெற்றிகரமாக நடைமுறைபடுத்தப்பட்டுள் ளது. நடவு செய்யவும், அறுவடை செய்யவும் இன்று பல இயந்திரங்கள் புழக்கத்தில் உள்ளன. இதேபோல் கரும்பு அறுவடையில் இயந்திரங்களை பயன்படுத்தினால் இதற்காக செய்யப்படும் செலவு குறைவதோடு, கூலியாட்கள் தட்டுப்பாடு பிரச்னைக்கு முழுதீர்வு கிடைக்கும். அத்துடன் குறித்த நேரத்தில் கரும்பு அறுவடை செய்வதால் கட்டுமானம் அதிகரித்து கூடுதல் லாபத்தை விவசாயிகள் ஈட்ட முடியும். கரும்பு அறுவடை இயந்திரங்களை பயன்படுத்த வேண்டுமெனில் "மீட்டர் பார்" முறையை பின்பற்றி கரும்பு நடவு செய்ய வேண்டும். அதற்கான இயந்திரங்களும், அறுவடைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களும் தமிழகத்தில் மிகக்குறைவாகவே உள்ளன.

அறுவடை இயந்திரங்களின் விலை மிக அதிகம் என்பதால் நெல் அறுவடை இயந்திரங்களை போல் பலரும் வாங்கி பயன்படுத்துவதில் சிக்கல் உள்ளது. சில தனியார் சர்க்கரை ஆலைகள் மட்டும் இந்த இயந்திரத்தை வாங்கி தங்களின் வாடிக்கையாளர்களாக உள்ள விவசாயிகளுக்கு அளித்து வருகின்றன. கரும்பு சாகுபடியில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள இயந்திரங்களை பயன்படுத்துவது என்பது இன்றுவரை தமிழக விவசாயிகளுக்கு எட்டாகனியாகவே உள்ளது. இது அனைத்து விவசாயிகளையும் சென்றடைய நவீன இயந்திரங்களை மானிய விலையில் வழங்கிடவும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் அரசே இயந்திரங்களை வாங்கி கொடுத்து பயன்படுத்திக்கொள்ள ஊக்கப்படுத்திட முன்வரவேண்டும். இதற்கான வழிகாட்டுதலை மாவட்ட வேளாண்மை துறையினர் விவசாயிகளை வழிநடத்திட முன்

வர வேண்டும். இதன்மூலம் கரும்பு சாகுபடியில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு உற்பத்தி பெருக வாய்ப்பு உருவாகும்.

**ப.வேலூரில் வெற்றிலை ஆராய்ச்சி மையம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,02:04 IST

நாமக்கல்: "ஆயிரக்கணக்கான விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக விளங்கி வரும் வெற்றிலை விவசாயம் மேம்பட ப.வேலூர் பகுதியில் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள வெற்றிலை ஆராய்ச்சி மையத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.நாமக்கல் மாவட்டம் ப.வேலூர், மோகனூர் வழியாக காவிரி ஆறு பாய்ந்தோடுகிறது. ஆற்றங்கரை ஓரம் உள்ள மோகனூர், பாலப்பட்டி, ப.வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இங்கு கற்பூரி, பச்சைக்கொடி போன்ற ரக வெற்றிலை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. அவ்வாறு விளைவிக்கப்படும் வெற்றிலை, நாள்தோறும் மோகனூர், ப.வேலூர் ஆகிய பகுதிகளில் கூடும் வெற்றிலை மார்க்கெட் மூலம் சேலம், நாமக்கல், திருச்சி உட்பட மாநிலம் முழுவதும் மட்டுமின்றி பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.அதன் மூலம் நாள்தோறும் லட்கணக்கான ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடந்து வருகிறது. மேலும், வெற்றிலை விவசாயத்தை சார்ந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாய கூலித்தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பருவகால சூழல் மாற்றத்தால் போதிய மழைப்பொழிவின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வெற்றிலை விவசாயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. அவ்வப்போது ஏற்படும் நோய் தாக்குதலினாலும் வெற்றிலை விவசாயம் நசிவதால், பல லட்சம் முதலீடு செய்யும் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.இந்த பாதிப்பில் இருந்து மீள்வதற்கு வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமென, அப்பகுதி விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதையடுத்து கடந்த 1970ம் ஆண்டு ப.வேலூர் தோட்டக்கலைத் துறை மூலம் வெற்றிலை மேம்பாட்டு விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து திருச்சி மாவட்டம் சிறுகமணி கிராமத்தில் வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்பட்டது.இது வெற்றிலை விவசாயத்திற்கு உயிரூட்டும் வகையில் அமைந்தது. வெற்றிலை விவசாயத்தில் புதிய ரகம், நோய் தாக்குதலில் இருந்து மீள்வதற்கான தொழில் நுட்பம் போன்றவை குறித்து அவ்வப்போது விவசாயிகளுக்கு ஆராய்ச்சி

மையம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ப.வேலூரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் மேற்கொள்ளப்படுவதால், திருச்சி மாவட்டத்தில் உள்ள இம்மையத்தை ப.வேலூருக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

இல்லையெனில் ப.வேலூரில் புதிய வெற்றிலை ஆராய்ச்சி மையம் ஏற்படுத்த வேண்டும் என பல ஆண்டுகளாக வெற்றிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.எனினும் வெற்றிலை விவசாயிகளின் இக்கோரிக்கை ஏட்டளவில் மட்டுமே உள்ளது. இந்தக் கோரிக்கை பற்றி குறித்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் கண்டுகொள்வது கிடையாது. தேர்தல் சமயத்தில் மட்டும் இத்திட்டத்துக்கு உயிரூட்டும் வேட்பாளர்கள், அதன்பின் அத்திட்டத்தை கண்டு கொள்வது கிடையாது என்பது அப்பகுதி வெற்றிலை விவசாயிகளின் ஆதங்கமாக உள்ளது.

**விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு கிலோ 100 ரூபாயாக விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:03 IST

தேனி : விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை கிலோவிற்கு 100 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு வெங்காயம் வாங்க வேண்டி உள்ளதால், விதைக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். சமீபத்தில் பெய்த மழையால் நாடு முழுவதும் வெங்காய விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், விளைச்சல் குறைந்து சின்ன வெங்காயத்தின் விலை வெளி மார்க்கெட்டில் 80 ரூபாய் வரை விற்கப்பட்டது. சீனா, பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டதால், தற்போது வெங்காயத்தின் விலை சிறிதளவு குறைந்துள்ளது. இந்நிலையில், மழை நின்று ஒரு மாதம் ஆகிவிட்டதால் விவசாயிகள் வெங்காயம் நடவிற்கு தயாராகி வருகின்றனர். ஆனால், விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் ராயப்பன்பட்டியில் மட்டும் சிறிதளவு விதை வெங்காயம் இருப்பு உள்ளது. கம்பம், கே.கே.பட்டி, பூசாரி கவுண்டன் பட்டி, சீலையம்பட்டி மார்க்கெட்களில் விதை வெங்காயம் இல்லை.

இதனால், தேனி மாவட்ட விவசாயிகள் திண்டுக்கல், நத்தம், ஒட்டன்சத்திரம் பகுதிக்கு சென்று விதை வெங்காயம் வாங்கி வருகின்றனர். அங்கு ஒரு கிலோ விதை வெங்காயத்தின் விலை 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 500 கிலோ தேவைப்படுவதால் விதை வெங்காயம் மட்டுமே 50 ஆயிரம் ரூபாய்க்கு வாங்க வேண்டி உள்ளது. தவிர உழவு, நடவு செலவு சேர்த்து 75 ஆயிரம் ரூபாய் ஆகி விடும். இதனால், விவசாயிகள் மலைத்துப்போய் உள்ளனர். தோட்டக்கலைத்துறை வெங்காயம் நடுபவர்களுக்கு ஏக்கருக்கு 7500 ரூபாய்க்கு உரம், பூச்சி மருந்துகள் வழங்க தயாராக உள்ளது. ஆனாலும், விவசாயிகள் விதைக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

**உச்சத்தில் இருந்த தேங்காய் விலை இறங்குமுகம் : மகசூல் அதிகரிப்பால் வியாபாரிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:14 IST

வத்திராயிருப்பு : கோடை வறட்சி காரணமாக உச்சத்திற்கு சென்ற தேங்காய் விலை, பருவமழைக்கு பின் மகசூல் அதிகரித்ததால் விலை குறையத்துவங்கியுள்ளது. வரத்து அதிகரித்திருப்பதால் விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோடை வெப்பத்தின் காரணமாக கடந்த 6 மாதமாக தென்னை விவசாயம் பெரும் தேக்க நிலையில் இருந்தது. வறட்சியால் பல்வேறு இடங்களில் தென்னை மரங்கள் பட்டுப்போயின. மரங்களை காப்பாற்ற, டேங்கர் லாரிகள் மூலமாக மரங்களுக்கு நீர்பாய்ச்சினர். கிடைக்கும் மகசூல் வரவை விட மரங்களை காக்க அதிக செலவு செய்தனர். ஓரளவு நீர் பிடிப்பு இருந்த தோப்புகளிலும் மகசூல் பாதியாக குறைந்தது. ராஜபாளையம், வத்திராயிருப்பு பகுதியிலிருந்து வடமாநிலங்களுக்கான தேங்காய் அனுப்பப்படுவதும் குறைந்தது. ஒரு தேங்காய் விலை 3 ரூபாயிலிருந்து 6.60 ஆக உயர்ந்தது. புதிய காய்கள் வரத்து: கடந்த இரு மாதங்களாக பெய்த மழை காரணமாக தென்னைக்கு தேவையான நீர்வரத்து கிடைத்தது.

வாடிய தென்னை மரங்கள் துளிர் விட்டு, புதிய பாளைகள் விடத்துவங்கின. தற்போது 20 சதவீதம் மகசூல் அதிகரித்து, வடமாநிலங்களுக்கு அனுப்பும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரித்தது. விலை குறைவு: இதனால் ஒரு தேங்காய் விலை 6.60 ரூபாயிலிருந்து 4.50 ஆக குறைந்தது. சில்லறைக்கடைகளிலும் 13 ரூபாய்க்கு விற்பனையான ஒரு தேங்காய் 7 ரூபாயாக குறைந்துள்ளது. இதனால் மக்களும் ஆறுதலடைந்தனர். கூமாப்பட்டி மொத்த வியாபாரி திருப்பதி கூறியதாவது: வழக்கமாக மாதத்திற்கு 10 லோடு அனுப்புவேன். வறட்சி நேரத்தில் 3 லோடாக குறைந்து, தற்போது ஆறு லோடு வரை அனுப்ப முடிகிறது. கான்சாபுரம் விவசாயி ராஜ்குமார் கூறியதாவது: தென்னை மரங்களில் தற்போதுதான் புதிய பாளைகள் விட்டு வருகின்றன. மகசூல் கிடைக்க இன்னும் மூன்று மாதம் ஆகும். அதன் பிறகே விலை சகஜநிலைக்கு வரவாய்ப்புள்ளது. தற்போது மகசூல் சிறிது அதிகரித்துள்ளது என்றாலும் விலை குறைந்துவிட்டதால் புதிய ஆதாயம் ஏதுமில்லை.

**விதை கிராம திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,02:19 IST

தென்காசி:சாம்பவர்வடகரையில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.செங்கோட்டை வட்டாரம் சாம்பவர்வடகரையில் விதை கிராம திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி பயிற்சி

முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும் போது, விதை பண்ணை அமைத்திட கடை பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி விளக்கினார். விதை சான்று அலுவலர் சிவகுருநாதன் பேசும் போது, விதை சான்று நடைமுறைகள், குறைந்த பட்ச முறைப்பு திறன், பிற ரக கலவன் அனுமதி பற்றி விளக்கினார்.துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் பேசும் போது, சிறு தானிய பயிர்கள் சாகுபடி முறை பற்றி விளக்கம் அளித்தார். விவசாயிகளை சிறு தானிய பயிர் சாகுபடி செய்துள்ள வயல் வெளிகளுக்கு அழைத்து சென்று ரக வேறுபாடுகள் பற்றி செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் சந்திரன், செல்வகுமார் செய்திருந்தனர்.

**மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,01:28 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடக்கிறது. இதில் விவசாய சங்க நிர்வாகிகள், பாசன சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முத்துஅரங்கில் கலெக்டர் மகேஷ்வரன் தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள், பாசன சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் என்று கலெக்டர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் ஜன.,27ல் உண்ணாவிரதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:58 IST

புதுக்கோட்டை: "ஊதிய உயர்வு வழங்க மறுக்கும் தமிழக அரசை கண்டித்து ஜனவரி 27ம் தேதி மாநிலம் தழுவிய உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவது,'என தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

புதுக்கோட்டையில் சங்க மாநிலத் தலைவர் ராமத்துரை வெளியிட்ட அறிக்கை: தமிழகம் முழுவதும் உள்ள 180 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக எந்தவித ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை. இதை கண்டித்தும், ஊதிய உயர்வு வழங்கக்கோரியும் தொடர்ந்து பல போராட்டங்களில் வங்கி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அனைத்து கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கி ஆணை பிறப்பித்துள்ள தமிழக அரசு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வு வழங்க மறுத்துள்ளது.
தமிழக அரசு மற்றும் கூட்டுறவுத் துறையின் ஒருதலைபட்சமான இத்தகைய நடவடிக்கையை கண்டித்தும், ஊதிய உயர்வு வழங்கக் கோரியும், ஜனவரி 27ம் தேதி மாநிலம் தழுவிய உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதென தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சங்கம் முடிவுசெய்துள்ளது. இதனடிப்படையில் அன்றையதினம் மாவட்டத் தலைநகர் பகுதிகளில் காலை 10 முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரதப் போராட்டம் நடக்கும். இதில் வங்கி ஊழியர்கள் அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்கின்றனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மா பூக்களில் சாம்பல் நோய் தாக்குதல் : கி.கிரி மாவட்ட விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2011,00:48 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மா பூக்களில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால், அதிக அளவில் பூக்கள் கருகி கீழே கொட்டி சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40,000 ஹெக்டேருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு நிலவும் சீதோஷ்ணநிலை வெப்ப மண்டல பழங்கள் சாகுபடி செய்ய சாதகமாக உள்ளன. இதில், மா சாகுபடி முக்கிய பங்கு வகிக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அல்போன்ஸா, தோதாபுரி பங்கனப்பள்ளி, நீலம், செந்தூரா, மல்கோவா, பீத்தர் ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், தோத்தாபுரி ரகம் 60 சதவீதத்திலும், செந்தூரா மற்றும் நீலம் ரகங்கள் 30 சதவீதத்திலும், அல்போன்சா 5 சதவீதத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற ரகங்களான பீத்தர், மல்கோவா, ருமானி, பங்கனப்பள்ளி, காலப்பாடு, போன்றவை 5 சதவீதம் சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது முன்பருவ ரகங்களான செந்தூரா, பீத்தர், பையூர்-1, நீலம் ஆகியவற்றில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது. இதே வேளையில் மத்திய பருவ ரகங்களான பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா, சேலம் பெங்களூரா, ஜஹாங்கீர், இமாம்பசந்த், குதாதாத் போன்ற ரகங்களில் பூக்கள் பூக்க ஆரம்பித்துள்ளது. பின் பருவ ரகங்களான நீலம், மல்கோவா போன்றவற்றில் இலைகளில் துளிர் விட்டு பூக்கள் பூக்க தயார் நிலையில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, சந்தூர், ஜெகதேவி, பர்கூர், தொகரப்பள்ளி, வேலம்பட்டி, நாகரசம்பட்டி, கரடியூர், பாலிநாயனப்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை,

ராயக்கோட்டை, வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளில் மத்திய பருவ ரகங்களில் பூத்துள்ள மா பூக்களில் பூசண நோயான சாம்பல் நோய் அதிக அளவில் தாக்கி வருகிறது. இந்த நோயின் தாக்குதல் டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை இருந்தாலும், ஜனவரி மாதத்தில் இந்த நோய் தாக்குதல் வீரியமைடயும். இந்த நோய் எல்லாவகை மா மரங்களையும் தாக்கும் திறன் கொண்டது. நோய் தாக்கிய தாவர பாகங்களில் மேல் வெண்மையான பஞ்சு போன்ற வளர்ச்சி காணப்படும்.

இந்த நோய் பூக்கள் மற்றும் இளம் பிஞ்சுகளில் தற்போது அதிமாக தெரிகிறது. நோய் தாக்கிய இலைகளில் பசுமை நிறம் குறைந்து இலைகள் பழுத்து காய்ந்து விடுகிறது. பூக்காம்புகளில் காணப்படும் வெண்மை நிற பூசண வளர்ச்சி நாளடைவில் கருப்பு நிறமாக மாறி, பூ மொட்டுகள் மற்றும் பூக்கள் வாடி கீழே கொட்டி வருகிறது. இதன் காரணமாக மா சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தொகரப்பள்ளியை சேர்ந்த மா விவசாயி சாமுண்டி கூறியது: மா மரங்களில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விடும் பருவத்தில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால் பூக்கள் அதிக அளவில் கொட்டி வருகிறது. நோயை கட்டுப்படுத்த மருந்துகள் தெளித்தும் பூக்கள் பெருமளவில் கொட்டி வருகிறது. மேலும், மாவட்டத்தில் தற்போது வழக்கத்துக்கு மாறாக பெய்து வரும் கடும் பணிப்பொழிவால் பூக்கள் கருக ஆரம்பித்து அதிக அளவில் பூக்கள் உதிர ஆரம்பித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா தோப்புகளுக்கு அருகில் அதிக அளவில் செங்கல் சூளைகள் அமைத்திருப்பதால் அதிலிருந்து வெளிப்படும் அதிக வெப்பத்திறனாலும் பூக்கள் கருக ஆரம்பித்துள்ளது. மேலும், செங்கல் சூளையில் இருந்து வெளிவரும் வாயுக்களால் மாவில் நுனிக்கருகல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. மா தோப்புகளுக்கு அருகில் செங்கல் சூளைகளை அமைக்க மாவட்ட நிர்வாகம் சில கட்டுபாடுகளை விதித்தால் மட்டுமே மா மரங்களில் பூக்கும் பூக்கள் உதிராமல் இருக்கும். இந்த ஆண்டு செங்கல் சூளை வைப்பவர்கள் அரசிடம் அனுமதி வாங்கவேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. மாவட்ட நிர்வாகம் செங்கல் சூளை அமைக்க அனுமதி வழங்கும் போது மா தோப்புகளுக்கு அருகில் செங்கல் சூளை அமைப்பதை கண்காணித்து அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

வேளாண் பொறியியல் துறை அலுவலகம் அமைக்க எதிர்பார்ப்பு

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,22:49 IST

உடுமலை : தொழிலாளர்கள் பற்றாக்குறையால் அறுவடை பணிகள் ஸ்தம்பித்துள்ள நிலையில், உடுமலை பகுதிக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில் தேவையான இயந்திரங்களையும், துறை அலுவலகமும் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.உடுமலை மற்றும் மடத்துக்குளம் தாலுகா பகுதிகளில் பி.ஏ.பி., மற்றும் அமராவதி அணை பாசனத்திட்டத்தின் மூலம் 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இப்பகுதியில் கிணற்றுப்பாசனம் மற்றும் மானாவாரியாகவும் பல ஆயிரம் ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.
நெல், கரும்பு, மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் சீசன்களிலும், தக்காளி, கத்தரி, சின்னவெங்காயம் உட்பட காய்கறி பயிர்கள், கொண்டைக்கடலை, கொத்தமல்லி, தட்டை, உளுந்து போன்ற மானவாரி பயிர்கள் இப்பகுதியில் பயிரிடப்படுகிறது. தென்னை சாகுபடி இப்பகுதியில் பிரதானமாக உள்ளது.தற்போது, பி.ஏ.பி., பாசனப்பகுதிகளில் மக்காச்சோளமும், அமராவதி பகுதியில் நெல் அறுவடை பணியும் தீவிரமாக நடக்கிறது. விரைவில், கரும்பு அறுவடை பணிகள் துவங்க உள்ளன. அறுவடை பணிகளுக்கு போதுமான தொழிலாளர்கள் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். குறித்த நேரத்தில் பணிகளை முடித்து விளைபொருட்களை சந்தைப்படுத்த முடியாமல், அனைத்து சாகுபடிகளிலும் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர். தொழிலாளர் தட்டுப்பாடு காரணமாக கூலி பல மடங்கு உயர்ந்துள்ளது.

உதாரணமாக மக்காச்சோள அறுவடை பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமாக 200 ரூபாயும், குறைந்தபட்சமாக 135 ரூபாயும் கூலி வழங்கப்படுகிறது. பல மடங்கு கூலியை உயர்த்தி கொடுத்தாலும், தொழிலாளர் கிடைக்காமல் தாராபுரம் போன்ற பகுதிகளிலிருந்து ஆட்களை அழைத்து வருகின்றனர். இதனால், சாகுபடியில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான தொகை அறுவடை பணிகளுக்கே செலவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கரும்பு அறுவடைக்கு பணிக்கு ஆட்கள் கிடைக்காமல் பல இடங்களில் தருணம் முடிந்து பயிர்கள் "பூ' விடும் நிலை உள்ளது. இதனால், கரும்பின் சர்க்கரை கட்டுமானம் குறைந்து நஷ்டம் ஏற்படும்.

பற்றாக்குறையை சமாளிக்க விவசாயிகள் பல்வேறு முறைகளை கையாண்டாலும் எவ்வித பலனும் இல்லை. இதனால், உடுமலை, மடத்துக்குளம் தாலுகா பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பு லே-அவுட்களாக மாற்றப்பட்டுள்ளது. 10 ஆயிரம் ஏக்கர் அளவில் தொழிலாளர் தேவை குறைவாக உள்ள தென்னை சாகுபடிக்கு விவசாயிகள் மாறியுள்ளனர். தேவை இயந்திரங்கள்: நடவு பணிகள் முதல் அறுவடை

வரை பல்வேறு இயந்திரங்கள் வேளாண்பல்கலைகழகம் மூலம் வடிவமைக்கப்பட்டாலும் அவை விவசாயிகளின் நேரடி பயன்பாட்டிற்கு வருவதில்லை. விவசாயிகள் தாங்களாகவே இயந்திரங்களை வாங்கி பயன்படுத்தவும் தேவையான மானியங்கள் கிடைப்பதில்லை.

அறுவடை மற்றும் இதர பணிகளில் விவசாயிகளுக்கான இயந்திரங்களை மானியத்திலும், சீசன் சமயங்களில் குறைந்த வாடகை அடிப்படையில் வழங்கவும் வேளாண் பொறியியல் துறை இயங்கி வருகிறது. இந்த துறையின் தேவை உடுமலை பகுதிக்கு அதிகமுள்ளது. இத்துறையின் தற்காலிக அலுவலகம் மட்டுமே உடுமலையில் செயல்பட்டு வருகிறது. இதனால், பண்ணைக்கருவிகள் மானியம் போன்ற திட்டங்கள் இப்பகுதிக்கு கிடைப்பதில்லை. தற்போது துவங்கியுள்ள மக்காச்சோள அறுவடையில் விளைநிலங்களில் நேரடியாக பயன்படுத்தப்படும் இயந்திரம் தனியாரால் பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகிறது.

இந்த இயந்திரம் நெல் அறுவடை பணிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. சீசன் சமயங்களில் வேளாண் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை, மடத்துக்குளம் தாலுகா பகுதியில் விவசாய சாகுபடி பரப்பு குறைவதை தடுக்க உடனடியாக வேளாண் பொறியியல் துறை நிரந்தர அலுவலகம் துவங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**துவரை, உளுந்தம் பருப்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2011,23:47 IST

மதுரை : மதுரையில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலை நூறு கிலோ மூடைக்கு 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றி செல்வன் கூறியதாவது : கடந்த வாரம் 3700 ரூபாய் முதல் 4000 ரூபாய் வரை விற்ற துவரம் பயறு, நேற்று 4000 ரூபாய் முதல் 4500 ரூபாய் வரை விற்க
பட்டது. உளுந்தம் பயறு 4700 ரூபாய் என்பது 4600 ரூபாயாக குறைந்தது. அதேசமயம் பருப்பு 5800 - 6000 ரூபாய் என்பது, 5800 - 6300 ஆக உயர்ந்தது. துவரம் பருப்பு 5500 - 6000, நேற்று 5650 - 6200க்கும், பாசி பருப்பு 5800 - 6300லிருந்து, 6000 - 6350 ரூபாய்க்கும் விற்கப்பட்டது, என்றார்.

# ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில் சீரகம் ஏற்றுமதி 36% சரிவு



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாத காலத்தில், நாட்டின் சீரகம் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 22,500 டன்னாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 36 சதவீதம் குறைவாகும். மதிப்பின் அடிப்படையில் இது, 30 சதவீதம் சரிந்து ரூ.270 கோடியாக குறைந்துள்ளது.

இந்நிலையில், சீரகம் உற்பத்தியில் முன்னணியில் உள்ள சிரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில், நடப்பு ஆண்டில் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம், நம் நாட்டில் சீரகம் உற்பத்தி, சென்ற ஆண்டைப் போலவே 25 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை = 55 கிலோ) இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. எனவே, வரும் மாதங்களில் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்தியாவிலிருந்து சீரகம் இறக்குமதி செய்வதில் லத்தீன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக பிரேசில் உள்ளது. மேலும், வளைகுடா நாடுகளும்

அதிக அளவில் இந்திய சீரகத்தை இறக்குமதி செய்வதாக நறுமணப் பொருள்கள் வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீரகம் ஏற்றுமதி கடந்த சில ஆண்டுகளாக ஏற்ற, இறக்கத்துடன் இருந்து வருகிறது. இது, கடந்த 2008–09–ஆம் ஆண்டில், வரலாறு காணாத அளவில் 52,500 டன்னாக அதிகரித்து இருந்தது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டில் 49,750 டன்னாக குறைந்துள்ளது.

## தமிழக அரசின் துரித நடவடிக்கை வெள்ள சேதத்துக்கு இதுவரை ரூ.465 கோடி நிவாரணம் மேலும் விரைவாக வழங்க அதிகாரிகளுக்கு கருணாநிதி உத்தரவு

சென்னை, ஜன.19–

தமிழக அரசின் துரித நடவடிக்கையால் வெள்ள சேதத்துக்கு இதுவரை ரூ.465 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது. மேலும் விரைவாக நிவாரணம் வழங்க அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

7 மாவட்டங்களில் பெருத்த சேதம்

தமிழகத்தில் சமீபத்தில் பெய்த மழையால் 28 மாவட்டங்களில் சேதம் ஏற்பட்டது. கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டது. 203 பேர் உயிரிழந்தனர். ஏராளமான கால்நடைகளும் இறந்தன. பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிர்கள் நீரில் மூழ்கின. அதனால் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டது.

முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையில் கடந்த மாதம் 7–ந் தேதி தமிழக அமைச்சரவையின் அவசர கூட்டம் நடந்தது. அதில், “பெருமழையால் ஏற்பட்ட பயிரிழப்புக்கும், சாலைகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிரந்தரமாக சீரமைக்கவும் தேவையான ரூ.1,832 கோடியை, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்க வேண்டும்’’ என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை வைத்தது.

ரூ.1832 கோடி நிவாரணம்

இந்த கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் வெள்ள சேதங்களை பார்வையிட்டு மதிப்பீடு செய்வதற்காக மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணை செயலர் எல்.விசுவநாதன்

தலைமையில் மத்திய உயர்மட்டக் குழு, வெள்ளம் பாதித்த மாவட்டங்களை 3 நாட்கள் பார்வையிட்டு சேதங்களை மதிப்பிட்டனர்.

அதன்பின்னர் டெல்லி திரும்பும் முன்பு சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த மத்திய குழுத் தலைவர் எல்.விசுவநாதன் கூறுகையில், 'வெள்ள சேதம் தொடர்பான அறிக்கையை விரைவில் மத்திய அரசிடம் சமர்ப்பிப்போம் என்று' தெரிவித்தார். அதன்படி மத்திய அரசிடம் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், தமிழக வெள்ள சேதங்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கலாம் என்று மத்திய அரசு இன்னமும் முடிவு செய்யவில்லை.

ரூ.1,100 கோடி ஒதுக்கீடு

இதற்கிடையே மத்திய அரசு நிதிக்காக காத்திருக்காமல், தமிழக அரசு நிதியில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக முதல்-அமைச்சர் கருணாநிதி ரூ.1,100 கோடி ஒதுக்கினார். அதன்படி, பயிர் சேதங்களுக்காக ரூ.400 கோடியும், பழுதடைந்த சாலைகள், குளங்கள், ஏரிகளை தற்காலிகமாக சீரமைப்பதற்காக பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றிற்கு ரூ.200 கோடியும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்காக மேற்சொன்ன 4 துறைகளுக்கும் ரூ.500 கோடியும் ஆக மொத்தம் ரூ.1,100 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல்லுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணமும், மானாவாரி பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4 ஆயிரமும், நெல் அல்லாத மற்ற பாசனப் பயிருக்கு ரூ.7 ஆயிரத்து 500-ம் நிவாரணம் வழங்க முதல்-அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டார்.

இதுவரை ரூ.465 கோடி நிவாரணம்

வெள்ள நிவாரணம் குறித்து வருவாய் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், "வெள்ளத்தால் உயிரிழந்தவர்கள், கால்நடைகள் இறப்பால் ஏற்பட்ட இழப்பு, குடிசைகள் சேதம் ஆகியவற்றிற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு இதுவரை ரூ.75 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது. பயிர் சேதங்களுக்கு நேற்று வரை ரூ.390 கோடி நிவாரணத் தொகை தொடக்க வேளா ண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. அந்த வங்கிகள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கி வருகிறார் கள்'' என்று தெரிவித்தார்.